# பெலவீனத்திலே




நம் வாழ்வில், நாம் சில நேரங்களில் பெலவீனப்பட்டு போகிறோம். சில நேரங்களில் ஆவிக்குரிய வாழ்விலும், சில நேரங்களில் சரீர பிரகாரமாகவும் பெலவீனப்படுகிறோம். பெலவீனத்தால் உண்டாகும் சோர்வினாலும் இன்னும் மற்ற உபாதைகளினாலும் நம் ஆவிக்குரிய வாழ்விலும், சரீர பிரகாரமான வாழ்விலும் நாம் தளர்ந்து போகிறோம். சில நேரங்களில் ஆவிக்குரிய வாழ்வில் உண்டாகும் பெலவீனத்தால் சரீரமும், சரீரத்தில் உண்டாகும் பெலவீனத்தால் ஆவிக்குரிய வாழ்வும் பாதிக்கப்படுகிறது. எனவே இவ்விரு வாழ்விலும் நாம் பெலனோடு காணப்படுவது அவசியம்.

நாம் ஏன் பெலவீனப்படுகிறோம் என்பதை முதலாவது காண்போம். சில வேளைகளில் நம்முடைய தவறுகளால் நம் வாழ்வில் பெலவீனங்கள் ஏற்படுகிறது. உதாரணமாக, நமது சரீரத்திற்கு ஏற்காத உணவை இச்சித்து உண்பதின் மூலம் பெலவீனம் ஏற்படுகிறது. ஆவிக்குரிய வாழ்விலும் நமக்கு ஏற்காதவற்றை இச்சித்து அவற்றை ஆவிக்குரிய வாழ்வில் அனுமதிப்பதின் மூலம் பெலவீனம் ஏற்படுகிறது. ஆனால் சில நேரங்களில் சத்துருவாகிய பிசாசானவன் நம் சரீரத்திலும், ஆவிக்குரிய வாழ்விலும் பெலவீனத்தை கொண்டு வருகிறான். இன்னும் சில நேரங்களில் தேவ சித்தத்தின்படி நம்

வாழ்க்கையில் அனுமதிக்கபடும் சில காரியங்களின் மூலம், நம் சரீரத்திலும், ஆவிக்குரிய வாழ்விலும் சோர்வு உண்டாகிறது.

எனவே முதலாவது நாம் கண்டபடி, நம்முடைய பெலவீனத்திற்கு நாமே காரணமானால், நாம் உடனடியாக அதற்கான தீர்வை தேட வேண்டும். குறிப்பாக, நம் ஆவிக்குரிய வாழ்வில் நம்மை விழ செய்கிற, பெலவீனப்படுத்துகிற காரியங்கள் எவை என்று அறிந்து அவற்றை விட்டுவிலகி, புதுபெலனை தேவனிடத்தில் கேட்டு பெற்றுக்கொள்ள வேண்டும். சிம்சோனின் வாழ்விலும், தாவீதின் வாழ்விலும் அவர்கள் பாவத்திற்குட்பட்டு பெலன் இழந்து சோர்ந்து போன நேரத்தில் அவர்கள் மனந்திரும்பி தேவனை நோக்கி கூப்பிட்டபோது கர்த்தர் அவர்களுக்கு வேண்டிய பெலனை தந்தார். பத்சேபாளிடத்தில் தாவீது பாவத்திற்குட்பட்ட பின்பு நாத்தான் தீர்க்கதரிசி அவனிடத்தில் வந்து அவன் பாவத்தை உணர்த்தின் போது பாடின சங்கீதத்தில், “உமது இரட்சணியத்தின் சந்தோஷத்தைத் திரும்பவும் எனக்குத் தந்து, உற்சாகமான ஆவி என்னைத் தாங்கும்படி செய்யும்.” (சங் 51:12) என்று கூறுகிறார்.

இரண்டாவது, சத்துருவினால் உண்டாகும் பெலவீனம். யோபுவின் வாழ்விலும், எலியாவின் வாழ்விலும் சத்துருவினால் உண்டான தாக்குதலினால் இருவரும் சோர்ந்து பெலன் இழந்து போனார்கள். இப்படிப்பட்ட நேரங்களில் நாம் அமைதியாக கர்த்தருக்கு காத்திருப்போமானால், “கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலன் அடைந்து, கழுகுகளைப்போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள்; அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்துபோகார்கள்” (ஏசா 40:31) என்ற வாக்குத்தத்தம் நம் வாழ்க்கையில் நறைவேறும்.

மூன்றாவதாக தேனால் அனுமதிக்கப்படும் பெலவீனம். ஆபிரகாம், அன்னாள், பவுல் ஆகியோரின் வாழ்க்கையிலும் பெலவீனங்கள் காணப்பட்டது. அதற்காக அவர்கள் தேவனிடத்தில் மன்றாடினர். தேவனோ தமது சித்தத்தின்படியே அவர்கள் வாழ்க்கையில் கிரியை செய்தார். பவுலுக்கோ, “அவர்: என் கிருபை உனக்குப்போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும்”, (2 **கொ** 12:9) என்று சொல்லி பெலவீனத்தை நீக்காமல் அதை தாங்கி கொள்ளும் பெலனை தந்தார்.

மேலும் நமது பெலவீன நேரங்களில் நாம் அந்நிலையிலேயே இருக்காமல் புதுபெலனை பெற்றுக் கொள்ளவேண்டும். இல்லையேல் அப்பெலவீனமே நம் சரீரத்தையோ, ஆவிக்குரிய வாழ்வையோ

முற்றிலுமாக அழித்து போட்டுவிடும். எனவே சிறு சிறு பெலவீனங்கள், சோர்வுகள் வரும்போதே அதற்கு தீர்வுகாண வேண்டும். எது எப்படியிருப்பினும் கர்த்தரே, “சோர்ந்துபோகிறவனுக்கு அவர் பெலன் கொடுத்து, சத்துவமில்லாதவனுக்குச் சத்துவத்தைப் பெருகப்பண்ணுகிறார்.” **(ஏசா 40:29)**, **ஆமென்**, **அல்லேலூயா**.